REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 108

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

PHONE No. [illegible]

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. [illegible]
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]

சென்னை: ஐப்பசி 1௳ சனி (17—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 2௳ ஞாயிறு (18—10—53)

ம. பிரதேச கவர்னர் செய்த குற்றம்!

நீதிமன்றத் தீர்ப்பை மதியாது, எட்-கான்ஸ்டேபிளை வேலையை விட்டு விலக்கிய அநீதி!

கவர்னர் செயல் 'விரும்பத் தகாதது' என்று பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கண்டிப்பு!

இந்திய அரசியல் சட்டம் 311 (2)-பிரிவுப்படி, ஒரு எட்-கான்ஸ்டேபிளை, வேலையிலிருந்து விலக்க மத்தியப் பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமையா எடுத்துக்கொண்ட நடவடிக்கையை, 'விரும்பத்தகாதது' என்று, பப்ளிக் சர்விஸ் கமிஷன் தனது 1952-ம் ஆண்டு அறிக்கையில் கூறியுள்ளது.

நாகபுரி, அக். 16—

குறிப்பிட்ட எட் கான்ஸ்டேபில் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு செஷன்ஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டார். குற்றவாளி இல்லை என்று, வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கில் சம்பந்தப்பட்டதை வைத்துக்கொண்டு, அவரை மத்தியப் பிரதேச சர்க்கார், அதிகாரிகள் கொண்ட நிர்வாக விசாரணையில் ஈடுபடுத்தி, அந்தக் கான்ஸ்டேபிளை வேலையிலிருந்து விலக்கி விட்டது.

அந்தக் கான்ஸ்டேபில் இந்திய அரசியல் சட்டம் 226 பிரிவின்கீழ், தனது அடிப்படை உரிமையைப் பெற வேண்டி, சர்க்கார் உத்திரவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். உயர் நீதிமன்றம், சர்க்

(3-ம் பக்கம் பார்க்க)

கல்லக்குடி அறப்போர்

★

இன்று
96-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று
95-வது நாள்

புதிய கல்வித் திட்டம்

இம்மாத இறுதியில் அறிக்கை தயாராகும்

சென்னை, அக். 15—

அரசாங்கத்தாரால், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட, புரொபசர் பாருலேகரைத் தலைவராகக் கொண்ட விசாரணைக் குழு இன்று மீண்டும் கல்வி இலாக்கா டைரக்டரின் அலுவலகத்தில் கூடியது. சென்னை அரசின் ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றிய சில புள்ளி விவரங்களை சேகரித்துக் கொண்டிருக்கும் அக் குழு, கல்வி இலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்திற்று.

"இந்து" நிருபரால் கேட்கப்பட்டபோது பாருலேகர், விசாரணைக் குழு அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகவும் இம்மாத இறுதியில் அறிக்கை தயாராகிவிடுமெனவும் கூறினார்.

காரைக்குடி இராம-சுப்பையா மற்றும் 35 தோழர்கள் விடுதலை

நகரமக்களின் நல்வரவேற்பு

திருச்சி, அக். 15—

கழகத்தின் செயலாற்றும் இயந்திரமாகப் பணியாற்றி வருபவரும், கல்லக்குடி அறப் போராட்டத்தின் இரண்டாவது படைத் தலைவருமான காரைக்குடி தோழர் இராம-சுப்பைய்யாவும், மற்றும் 35 தோழர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். சிறைவாயிலில், தோழர்கள், கழக முக்கியஸ்தர்களாலும், ஏராளமான தோழர்களாலும் பெருமகிழ்வுடன் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டதுடன், பெரும் அணிவகுப்புடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், சிறைமீண்ட தோழர்கள், பெருமிதத்துடன் பாராட்டப்பட்டனர்.

கல்லக்குடி போராட்டத்தில் காரைக்குடி தோழர் இராம சுப்பையா அவர்கள் தலைமையில் இரண்டாவது படையில் கைது செய்யப்பட்டு 3 மாத சிறை தண்டனை பெற்று மீண்ட தோழர்கள்: இராம. சுப்பையா, டி. எம். ரத்தினம், டி. கே. சின்னதுரை, ஆர். நடராசன், எஸ். சி. பரமானந்தம், பி. ராமு, ஏ. தங்கவேலு, ஏ. சின்னையன், எஸ். சக்தி, ப. அனீப், டி. ஏ. கமலன், என். சோமசுந்தரம், எஸ். ஏ. முகம்மதலி, எஸ். காளிதாஸ், எம். முருகேசன், எம் வேணுகோபால், டி. எத்திராஜ், ஏ. மருதமுத்து, வ. பாண்டியன், கு. முனியசாமி, எஸ். கலைமணி, தமிழ்முத்து, ஏ. முருகேசன், கரை, நல்லமணியன், ப. இராவணன், ஏ. மருதநாயகம், நா. சக்கரபாணி, என். வடிவேல், பி. திருமால், பொன்னுசாமி, கே. ஆர். கே. வளர்மதி, பெ. ராமன், ந. சண்முகம், மு. கருப்பையா, மு. ரெங்கசாமி, சா. காளியப்பன் ஆகிய 36 தோழர்களும் இன்று பகல் 12-மணிக்கு திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை அடைந்தார்கள்.

விடுதலை வீரர்களை வரவேற்க திருச்சி நகர செயலாளர் எம். எஸ். மணி, எ. பி. தர்மலிங்கம், வி. பராங்குசம், திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன், வி. சிவப்பிரகாசம், ரா. ராஜன், தி. உ. சங்கிலி, திருச்சி நகர கிளைக்

(3-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

கிடையாது. அவர்களில் ஒவ்வொருவரும், சராசரியாக, ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்றுக்கொள்ளும் கடன் சுமையோ ரூ. 40—8—0.

இந்தப் புள்ளி விவரத்தை, ஆந்திர விவசாயிகளின் குறைபாடுகளைக் களையவேண்டி, ஆந்திர் பிரதமர் பிரகாசம் அவர்களிடம் தரப்பட்டுள்ள கோரிக்கையில் பார்லிமெண்டு உறுப்பினரான தோழர் பி. எம். மூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திராவில் 60 சதத்தினர் நிலத்தை நம்பி உள்ளவர்கள்

48 சதவிகிதத்தினர் உழவர்களாக உயிர் வாழ்பவர்கள்

கர்நூல், அக். 16—

ஆந்திர மாநிலத்தில் உள்ள மொத்த மக்கள் தொகை 1,98,35,000 ஆகும். இவர்களில் 60 சதவிகிதத்தினர். பயிர்த்தொழிலை நம்பிக் கொண்டு இருப்பவர்கள். அங்கு, பயிர் செய்யத்தகுந்த நிலப்பரப்பு 3,96,34,403 ஏக்கராக உள்ளது. இதில் 1,46,64,823 ஏக்கர் நிலப்பரப்பே பயிர் செய்யப்படுகின்றன.

ஆந்திர மொத்த ஜனத்தொகையில் ஏழை உழவர்கள் 48.4 சதவிகிததினர் உள்ளனர். இவர்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டு வருகிறது. இவர்களில் ஆண்கள் பெறும் தினசரி கூலி 12 அணாதான். இதற்கு, அவர்கள் 10 மணி நேரம் நிலத்தில் பாடுபட வேண்டும். பெண்களும் இது போலதான் உழைக்க வேண்டும். ஆனால், அவர்கள் பெறும் கூலியே 8 அணாவுக்குமேல்

(தொடர்ச்சி 3-ம் கலம் பார்க்க)

★★

தோழர்களே! உங்கள் பதில் என்ன?

★

தூத்துக்குடித் தோழர்கள் மீது சாட்டியிருக்கும் குற்றப் பட்டியல் **96**

★

சுமத்தப்பட்டிருக்கும் செக்ஷன்கள் **16**

120பி, 397, 395, 147, 128, 143, 149, 435, 126, 336, 427, 148, 307, 448, 454, 379

★

சதி வழக்கு சம்பந்தமாக சர்க்கார் தரப்பு சாட்சியங்கள் **91**

★ ★ ★

இதற்கு, உங்கள் பங்கு என்ன?

சதி வழக்கு நிதிக்கு பணம் அனுப்பி விட்டீர்களா?

இன்றே அனுப்புங்கள்! அதுவும் உடனே அனுப்புங்கள்!

★★

கலை நிகழ்ச்சி

18—10—53 ஞாயிறு மாலை வெள்ளூர் பிள்ளையார் கோயில் மைதானத்தில் சித்தனி சுப்ரமணியம் அவர்களால் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

ஐவர் சிறையில்!
இன்று
47-வது நாள்

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை
சென்னை : 17—10—1953 சனி

புத்தியைத் தீட்டுவீர்!

தோழர் அண்ணாதுரை அவர்கள், நமது தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர். தூய்மையான இருதயத்தையும் புனிதமான தொண்டுள்ளத்தையும், உயர்ந்த இலட்சியங்களையும், மாசுமருவற்ற சிறந்த நடைமுறைகளையும், ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை முறைகளையும் மேற்கொண்டு பொது வாழ்வில் கலந்துகொண்டு இருப்பவர் என்பது, நமது அரசியல் எதிரிகளாலும் ஒருமித்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மை.

அவருடைய உள்ளம், கொலை வினையை, தனிப்பட்டவர் விஷயத்தில்கூட அனுமதிக்க ஒருப்படாததோடு, கண்டித்து ஒதுக்கும் நிலையில் பண்பட்டு உள்ளதாகும். தனி நபர் பலர் சேர்ந்துள்ளதே ஒரு சிறு சமூகம். தனி நபர்களின் சிந்தனையும், செயலும் தூய்மையானதாகவும் புனிதமானதாகவும் இருந்தால்தான், சமூகம் முழுதும் புனிதமுள்ளதாகவும், தூய்மையுள்ளதாகவும் உருவாகும் என்ற அடிப்படையை உணர்ந்து, அந்த உயர்ந்தத் தன்மையை பொதுவாக எல்லா மக்களிடமும் குறிப்பாக திராவிட இன மக்களிடமும் காண வேண்டும் என்று ஆசை கொண்டு இருப்பவர்; அதற்காக, தனது அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஒத்த வகையில் தனது பொது வாழ்வை அமைத்துக் கொண்டு இருப்பவர் என்பதை நாடு அறிந்து இருக்கிறது.

தோழர் அண்ணாதுரை அவர்கள் எழுதியுள்ளதும், நிழல் படம் ஆக்கப்பட்டுள்ளதுமான 'வேலைக்காரி' யில், சதாரபகனான ஆனந்தன், தனது தகப்பன் தூக்கிட்டு மாண்டதற்குக் காரணஸ்தராக இருந்தவர்மீது பழிவாங்க எண்ணி, கத்தியைப் பளபளப்பாகத் தீட்டுவதையும், அது கண்டு, மணி என்னும் உலகியல் தெரிந்தவன் 'கத்தியைத் தீட்டாதே; உன் புத்தியைத் தீட்டு' என்று கூறி, ஆனந்தனின் மனத்தை மாற்றி, ஆனந்தனின் கோபத்தை வேறு நடைமுறைக்குத் திருப்பிவிடுவதையும், கண்ட எவருக்கும் அண்ணாதுரை, பலாத்காரச் செயல்களை எந்த அளவில் வெறுக்கிறார், விலக்க முயலுகிறார் என்பது விளக்கமாகும்.

ஆனந்தனின் நிலை என்ன? எந்த சூழ்நிலையில் ஆனந்தனுக்கு கத்தியின் துணையைத் தேடும் புத்தி ஏற்பட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்றபொழுது, உள்ளம் உடைந்துள்ள நிலையில் ஆத்திரத்துக்கு ஆளாகி, அவனுடைய உள்ளத்தில் மறைந்து கிடக்கும் மிருகம், ஆனந்தனைக் கொலை வினை புரியத் தூண்டி இருக்கிறது என்பது தெளிவாகிறது!

மிருக சுபாவத்திற்கு அடிமையாகிக் கிடக்கிற ஆனந்தனை, தக்க நியாயங்களை எடுத்துக் கூறி, மீண்டும் மனித சுபாவத்துக்குத் திருப்பிக்கொண்டு வருகிறான் மணி.

மனித இயல்புடன் விளங்கும் ஆனந்தனைத்தான், அவர் விரும்புகிறாரேயல்லாது, நினைத்ததை முடிக்க, கத்தியைக் கைப்பிடிக்க அவசரங் காட்டும் மிருக சுபாவங்கொண்ட ஆனந்தனை, தனது கதையில் காணவும் நண்பர் அண்ணாதுரை அவர்கள் விரும்பவில்லை. அவருடைய உள்ளக்கிடக்கை, அன்றும், இன்றும், என்றும் பிற இன்னுயிர் நீக்கும் வினையிலிருந்து வேறுபட்டதேயாகும். கருத்திலே உள்ளதுதான் கதையிலே அமையும். அவருடைய பொது வாழ்வும், கொல்லா நோன்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளதாகும்.

அவருடைய அரசியல் வாழ்வு, நமது தி. மு. கழகத்துடன் பின்னிக் கிடப்பது. ஒன்றை ஒன்று நீங்கி இயங்குவதன்று. உடலும் உயிரும் போலவும், முல்லையும் மணமும் போலவும் பிரித்துப் பார்க்க முடியாதத் தன்மையில் ஒன்றியுள்ளதாகும்.

நமது தி. மு. கழகம் துவங்கி நான்கு ஆண்டுகள் நிரம்பிவிட்டன; ஐந்தாம் ஆண்டு நடந்துகொண்டு இருக்கிறது.

மக்களின் பேச்சுரிமையைத் தகைய சர்க்கார் 144 அடக்குமுறை சட்டத்தை ஏவிய காலத்தில், கழக முடிவுக்கு ஒப்ப, சில பலர் அத் தடையை மீறியுள்ளனர். நீதி மன்றம் அளித்த தண்டனையை ஏற்றுக்கொண்டு சிறைபுகுந்துள்ளனர்.

தேனி போன்ற ஊர்களில், நமது கழக வீரர்களை, சித்திரவதை செய்து கொல்ல, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில களபதிகள் முனைந்துள்ளனர். அந்தத் தாக்குதலை, நமது தோழர்கள் தாங்கிக் கொண்டனரே யல்லாது, கத்தியை மனதினாலும் தீண்ட நினைந்தது கிடையாது.

சென்னை நகரில் தோழர் பாண்டியன் குத்திக் கொல்லப்பட்டார். அப்பொழுதும் தாங்கிக் கொண்டோம்; தடியைக் கூடத் தேடவில்லை.

நெல்லிக்குப்பத்தில் தோழர் மஜீத் என்ற இளைஞனை, காந்திய வழிவந்தவர்கள் என்று சொல்லிக்கொண்ட சிலர், வெட்டி உயிரைக் குடித்தனர். வேதனைப்பட்டோம், கண்ணீர் விட்டோம், மஜீத் குடும்பத்திற்கு நம்மால் முடிந்த ஆதரவு காட்டினோம். கழகத்தின் கோட்பாட்டிற்கேற்ப நடந்து கொண்டோமே யல்லாது, 'அடியாட்களாக' சிலரை நாம் மாற்ற முயலவில்லை.

நமது கழகம் துவக்கிய நான்கு ஆண்டு காலத்துக்குள், காங்கிரஸ் கட்சியினரின் மிருக நடைமுறைகளை, நாம் தாங்கிக் கொண்டு இருக்கிறோமே யல்லாது, கத்தியையோ, கழியையோ, வேறு கூர்மை ஆயுதங்களின் துணையையோ நாடும் மனிதப் பண்பு கெட்டு நமது தோழர்கள் நடந்துகொண்டது கிடையாது.

காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை ஒருபக்கம்; காந்திய வழிவந்தவர்கள் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ் களபதிகளின் மிருகத் தாக்குதல் ஒரு பக்கம்; இதற்கிடையே, அந்தத் தாக்குதல்களை எல்லாம் முகமலர்ச்சியோடு தமது மார்பிலே தாங்கிக்கொண்டு வந்திருக்கிறது. தி. மு கழகம்; தேய்ந்து விடவில்லை. முன்னிலும் பன் மடங்கு—ஏன்—நூறு நூறு மடங்கு வளர்ந்தோங்கி, ஒவ்வொரு 'இல்லந்தோறும், நல்லவர் உள்ளந்தோறும்' சென்று நிரம்பி வளர்ந்து வருகிறது; வெற்றிப் பாதையை நோக்கித் தீவிரமாக நடை போட்டுக்கொண்டு இருக்கிறது.

இவ்வளவு பயங்கரத் தாக்குதல்களையும் சமாளித்துக் கொண்டு, சர்க்காரின் அடக்குமுறைகளையும் எதிர்த்து நின்று கொண்டு, திராவிடத்தில் வளர்ந்துவரும் தனிப்பெரும் இயக்கம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றே ஒன்று தான் என்பதை நாடு அறிந்திருக்கிறது. அரசியலாரும் இந்த மகத்தான உண்மையை அறிவர்; ஆனால், வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதற்கு, மேலும் சில காலம் செல்ல வேண்டும்.

நமது வளர்ச்சி: நாம் பெற விரும்பும் லட்சியத்தை மட்டுமே பொறுத்திருக்கிறது என்பதில்லை அதை அடைய, லட்சிய வெற்றிக்காக நமது தி. மு. கழகம் மேற்கொள்ளும் பரிசுத்தமான, மனிதப் பண்புக்குடைய நடைமுறையையே பெரிதும் பற்றிக்கொண்டு இருப்பதாகும். பொதுச் செயலாளரில் இருந்து, சாதாரண ஊழியர் வரையில், அனைவரும் ஊழியர்கள் என்ற உறுதியான எண்ணத்துடனும், உள்ளும் புறமும் ஒத்த அறநெறியினாலும் நமது நடைமுறைகள் இயங்கி வருவதினாலும், இந்த வேகமான வளர்ச்சி நமது தி மு. கழகத்துக்கு ஏற்பட்டு இருக்கிறது

நமது சிந்தனையும், செயலும், பலாத்காரச் செயலை வெறுத்து ஒதுக்கி, அகிம்சா வழி இயங்கி வருவதால்தான், நாம் எதிர்பாராவகையில், திராவிட மக்களின் அன்பும், ஆதரவும் விநாடிக்கு விநாடி, நமது தி. மு கழகத்தை நோக்கி வந்தடைந்துகொண்டு இருக்கிறது.

நமது தி. மு கழகத்துக்கென வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்கள் உண்டு. அகிம்சா வழி இயங்கவேண்டும் என்பதுதான் சட்ட திட்டங்களில் பொதிந்துள்ள ஏற்பாடு. இந்த உண்மையை அறிந்து செயலாற்றும் செயல் வீரர்கள் தான், நமது தி மு. கழகத்தில் உள்ளனர். கத்தியை ஏந்தி, கயமைப் போர் களம் புகும் இழி மதி கொண்டவர்கள் நமது தி. மு. கழகத்தில் ஒருவரும் கிடையாது. அத்தகு கோழைகளை நமது தி. மு. கழகம் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளக் கழக சட்டதிட்டங்களில் இல்லை என்பதை அனைவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

நாம் காட்டிலே உலாவவில்லை. மக்கள் நடமாடும் நாட்டிலேதான் உலாவுகிறோம் வனவிலங்குகளிடை செல்ல வேண்டுமானால்கூட, துப்பாக்கித்தான் தேவையாகிறதே யல்லாது, வெறும் கத்தி அல்ல

காங்கிரஸ் களபதிகளோ சிலர்; நமது தி. மு. கழகத் தோழர்களோ பலர்; நம்மீது அன்பு பாராட்டி ஆதரவு கொடுத்துவரும் பொதுமக்களோ அதனினும் பலர். எனவே, பலராக உள்ள நாம்; சிலராக உள்ள காங்கிரஸ் களபதிகளைக் கண்டு அஞ்சத் தேவையே இல்லை

காங்கிரஸ் களபதிகளும், இருபத்திநான்கு மணி நேரமும் மிருக இயல்போடு இருக்கமாட்டார்கள்—இருக்க முடியாது. அவர்கள், இன்றைக்கில்லையேனும், வேறு என்றைக் காவது, தாங்கள் புரிந்த, புரியும் தீய வினைக்கு வருந்தியே தீருவார்கள்.

அந்தக் கழுவாய் தேடும் நாளை, நமது தி. மு. கழகத் தோழர்கள், தங்களுடைய 'தாங்கிக் கொள்ளும் நெஞ்சுரத்தை' மேலும் உறுதியாக்கிக் கொள்வதின் மூலம், குறுகிய காலமாக மாற்ற முயலவேண்டும். இந்த மாற்றும் பணி, நமது இயக்கப் பணிகள் அனைத்திலும் முதன்மையானது, முக்கியமானது, தனிச் சிறப்புடையது என்பதை தோழர்கள் அறிந்து நடக்க வேண்டும்.

பலராக உள்ள நாம், சிலராக இருப்பவர்களைக் கண்டு அஞ்சுவது கூடாது—அருத்தமற்றது—எள்ளி நகையாடத் தக்கது!

சிலராக உள்ளவர்கள், கத்தி மட்டுமல்ல—வேறு எந்தக் கொலைக் கருவியையேனும் கைப்பிடித்துக் கொள்ள வேண்டியது என்பது, அவர்கள் தலைவர் கூறும் கூற்றுப்படி, நியாயமாக இருந்தாலும் இருக்கலாம். தலைவர் சொல்லை ஏற்று நடப்பதா, தட்டிச் செல்வதா என்று தீர்மானிக்க வேண்டிய கடமை, அந்தச் சிலருடையதாகும். நமக்கில்லை, அந்தக் கவலை.

சிலராக உள்ள காங்கிரஸ் களபதிகள், நமது தி. மு. கழகத்தை ஒடுக்கிவிட, கொலைக் கருவிகளின் துணையைத் தேடினதிலிருந்தே தெரியவில்லையா, அந்தக் காங்கிரஸ் களபதிகளுக்கும், பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பின் லட்சணம்?

காங்கிரஸ் களபதிகள் தங்களுடைய கூடா ஒழுக்கத்தினால் மேற்கொள்ளும் கொலைவினைகளுக்கு, இதுவரை கிடைத்திருக்கும் நேரடியான பலன் எவை என்பதை நமது தோழர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சிக்குப் பொதுமக்களிடம் இருந்துவரும் கொஞ்சநஞ்ச மதிப்பும், காங்கிரஸ் களபதிகளின் அட்டகாசத்தால், வேகமாகக் கரைந்து கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அதே நேரத்தில் நமது தி. மு. கழகம் பொதுமக்களின் நம்பிக்கையை அமோகமாகப் பெற்று வருவதையும் பார்க்கிறோம். எனவே, இந்த ஆதரவை, அன்பை, நமது தி. மு. கழகத் தோழர்கள், தங்களுடைய அறநெறியின் துணையினால் பெருக்கி வர வேண்டும்.

சிலராக இருக்கிறவர்கள், கத்தியை மட்டுமல்ல—உலக்கையைக்கூட வேண்டுமானால் தோளில் சுமந்துகொண்டு திரியட்டும். நமது தி. மு. கழகம் அதைக் குறித்துக் கவலைகொள்ளப் போவதில்லை.

கொல்லா நோன்பினைக் கொண்டுள்ள சட்ட திட்டங்களைக் கொண்ட தி. மு. கழகத் தோழர்கள்; அகமும், புறமும் அறநெறி வழி நிற்கும் பொதுச்செயலாளரைக் கொண்டுள்ளவர்கள்; நாமோ பலர், கத்தியைஅல்ல—'புத்தியைத் தீட்டுவீர்' என்று திராவிட மக்களுக்கு, ஒரே குரல் கொண்டு கூவுவோம் வாரீர்' என்று, தி. மு. கழகத் தோழர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

"தாக்கினால், (தாக்குவர்) தாங்கிக் கொள்ளுங்கள்—தாயகத்தின் தளைகளை உடைத்தெறியும் பணியில் ஈடுபட்டுள்ளோருக்கு இந்த நெஞ்சுரம் நிச்சயம் தேவை."

நிபுணர் குழு
நால்வரில் ஒருவரைக் காணோம்!

ஆச்சாரியார் விளக்குவாரா! ராஜாஜியின் கல்வித் திட்டத்தை பரிசீலிக்க 4 பேர் கொண்ட கமிட்டி ஒன்று போடப்பட்டதல்லவா? இதில் ஒருவர் கல்வி இலாகா டைரக்டர். இக் கமிட்டியிலுள்ள பாக்கி மூவரைப் பற்றித்தான் ரொம்ப அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதில் ஒருவர் இதுவரை வரவே இல்லையாம், இந்த ரகசியம் வேறு எந்தப் பத்திரிகையிலும் வந்திருக்கிறதா என்பதையும் கவனித்துப் பாருங்கள்.

'பேரிகை' 19—10—53.

திரு. வி. க. படத் திறப்பு

18—10—53 ஞாயிறு மாலை 5-மணிக்கு, புரசை, கங்காதீசுவரன் கோவில் தெரு, நகராண்மைக் கழக ஆண்பள்ளியில், தோழர் டி. புருஷோத்தமன் எம். எல். சி. தலைமையில், விழா நடைபெறும்.

ஜஸ்டிஸ் என். சோமசுந்தரம் அவர்கள், திரு. வி. க. நூலகத்தையும், டாக்டர் ப. நடராசன் எம். ஏ., டி. லிட், திரு. வி. க. படத்தையும், பேராசிரியர், ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல்., குறள் வகுப்பையும் — திறந்துவைப்பார்கள். தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., புலவர் ஏ. கே. வேலன், பூ. கணேசன் எம். ஏ., சொற்பொழிவாற்றுவர். அனைவரும் வருக.

கோட்டையூர் செட்டியார் கைதானார்

காட்டுப்புத்தூர், அக். 14—4 மாத காலமாக தலைமறைவாக இருந்த பள்ளத்தூரைச் சேர்ந்த கோட்டையூர் சிவன் கோவில்டிரஸ்டி எம்.என்.நாகப்ப செட்டியார், இன்று காட்டுப்புத்தூர் சப்-இன்ஸ்பெக்டர் ஆர். துரைசாமி என்பவரால் கைது செய்யப்பட்டார்,

சிறுபான்மை வகுப்பினர் இடம் பெறாத ஆந்திர சட்டசபை

கிறித்துவப் பிரதிநிதியும் இல்லை! முஸ்லிம் உறுப்பினரும் இடம் பெறவில்லை!!

வகுப்பு எண்ணிக்கைப்படி பிரதிநிதித்துவம் ஒதுக்க வேண்டுகோள்

இந்தியக் கிறித்துவர் மாநாட்டின் ஒருமித்த கருத்து

புதுடில்லி, அக். 16—

அகில இந்திய கிறித்துவ மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் ராலியாராம், "நாட்டில் உள்ள சிறுபான்மையினர் நலன்களைக்கண்காணிப்பதற்காக ஒரு சிறுபான்மையினர் குழு ஒன்றை உருவாக்க வேண்டும்," என்று, தனது தலைமை உரையில்குறிப்பிட்டார்

பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் லங்காசுந்தரம் மாநாட்டை திறந்துவைக்கும் பொழுது, 'பெரிய அரசியல் கட்சி என்ற முறையில் காங்கிரஸ் கட்சியுடன் மற்ற அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி, அந்தந்தப் பகுதியில். உள்ள மக்கள் எண்ணிக்கைக்கேற்ப, மாவட்ட நகர மன்றங்களிலும், மாநில சட்ட சபைகளிலும், பார்லிமெண்டுகளிலும், சிறுபான்மையினர் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கான வாய்ப்பினைத் தேடித்தர முன்வர வேண்டும்' என்றும், 'அதாவது, விளக்கமாகக் கூற வேண்டுமானால், சில இடங்கள் சிறுபான்மையினருக்காகப் போட்டியின்றி விட்டுவிட வேண்டும்' என்றும்,

'145 உறுப்பினர்கள் உடைய ஆந்திர சட்ட சபையில், 10,00,000 கிறித்துவர்களும், 12,50,000 முஸ்லீம்களும் ஆந்திரத்தில் இருந்துங்கூட அவர்களில் ஒருவர்கூட சட்ட சபை உறுப்பினர்களாக இல்லாமல் இருப்பதை, நான் வெட்கத்துடன்ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது' என்றும் திறப்பு விழா உரையில் குறிப்பிட்டார்.

எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட்டுவருவதாக உதட்டளவில் பேசப்படுகிறதேயல்லாமல், உண்மையில் காங்கிரஸ் ஆட்சியில் நடைபெறுவது வேறுவகத்தான் இருக்கிறது என்றும், நடைமுறையில் சிறுபான்மை வகுப்பினைத்தான் சர்க்கார் முதல் முதலாகப் புறக்கணித்து வருகிறார்கள் என்றும் தலைவர் ராலியா ராம் குறிப்பிட்டார்.

காரைக்குடி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கழக செயலாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தி. மு. க. தொண்டர்கள் கிராமங்களிலிருந்தும் தி. மு. கழக கொடிகளுடன் வந்திருந்தார்கள். சிறை வாயிலிலே அனைவருக்கும் மலர் மாலை அணிவித்து வரவேற்று போட்டோ எடுத்தபின் சிறை வாயிலிலிருந்து மாபெரும் ஊர்வலம் 'அண்ணாவை விடுதலைசெய்! கலைஞர் கருணாநிதியை விடுதலை செய், அந்தக்குடி—கல்லக்குடி வழக்குகளை வாபஸ் வாங்கு, சட்ட ரீதியாக டால்மியபுரம் பெயரை மாற்று" என்பன போன்ற கோஷங்களுடன் நகர் முழுதும் சென்றது. இடையிலே ஊர்வலம் பாலக்கரையை அடைந்ததும், தோழர் ஐ. எம். ஷரீப் அவர்களின் பீடித தொழிலாளர் சங்கத்தில் விடுதலை வீரர்களுக்கு தேனீர் அளிக்கப்பட்டது. பிறகு ஊர்வலம் சரியாக 4-30 மணிக்கு சிந்தாமணி தி. மு. கழகத்தில் முடிவடைந்தது. தொண்டர்களுக்கு நகர தி. மு. கழகத்தின் சார்பில் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.

மாலை 5 மணிக்கு திருச்சி மணிக்கூண்டிலிருந்து தொண்டர்கள் அணிவகுத்து வர மாபெரும் ஊர்வலம் துவங்கி 6 மணிக்கு வன்னிமரத்தடி மைதானம் வந்து சேர்ந்தது.

மாலை 6 மணிக்கு தோழர் ஐ. எம். ஷரீப் தலைமையில் பாராட்டுக் கூட்டம் துவங்கியது. தலைவர் உரைக்குப்பின் தோழர் எம். எஸ். மணி சிறைசென்று மீண்ட தோழர்களைப் பாராட்டி பேசி அவர்களை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி நகர தி. மு. கழகத்தின் சார்பில் மலர்மாலை அணிவித்தார். பின் தோழர்கள் சிவப்பிரகாசம், ஏ. பி. தர்மலிங்கம், எஸ். செமோறன் ஆகியோர் ஆச்சாரியாரின் போக்கைக் கண்டித்தும், சிறை சென்றவர்களை பாராட்டியும் பேசியபின் நன்றி கூற, கூட்டம் 9½ மணிக்கு முடிவுற்றது.

இரவு பத்து மணிக்கு நகர தி. மு. கழகத்தின் சார்பில் தோழர்களுக்கு உணவு அளித்து தோழர்களை அவரவர்களுடைய ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மத்திய பிரதேச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கார் வேலை நீக்க உத்திரவை ரத்து செய்துவிட்டு, கான்ஸ்டேபிளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது.

இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மத்தியப் பிரதேச கவர்னர், இந்திய அரசியல் சட்டம் 311(2)-வது பிரிவின்படி, ஏன் வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்று அந்தக் கான்ஸ்டேபிளுக்கு அறிக்கை ஒன்றைக் கொடுத்தார்.

இந்த விவகாரம், பப்ளிக் கமிஷன் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது.

"ஒரு கிரிமினல் வழக்கில் சட்டப்படி அமைந்துள்ள நீதிமன்றத்தின் முடிவிற்கு எதிராக, இப்போது நடந்து கொண்டுள்ள முறைப்படி, கவர்னர் தம்மிச்சையாக அதிகாரத்தைச் செலுத்தி இருப்பது கண்டிப்பாகக் கூடாது. எனவே, வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளகுற்றங்களுக்குப்புறம்பாக விரும்பத்தகாத வேறு எதற்காக வேண்டுமானாலும் அந்தக் கான்ஸ்டேபிளை வேலையில் இருந்து விலக்கலாமே அல்லாது, சுமத்தப்பட்ட குற்றத்திற்காக கான்ஸ்டேபிளை தண்டிப்பதென்பது கண்டிப்பாகக் கூடாது."

டாக்டர் ரீ தம்பதிகள்மீது விதவைகள், தாய்மார்கள் தாக்குதல்

தப்பிப் பிழைத்ததே பெரும் பிரயத்தனமாகப் போய்விட்டது

கோயல், அக். 16—

கோரியப் போராட்டத்தில் உயிர்நீத்த சிப்பாய்களுக்காக நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தென் கோரியத் தலைவன் டாக்டர் ரீ, தன் மனைவியுடன் சென்றார். அந்த இடத்தில் ஆத்திரம் அடைந்து விதைவைப் பெண்களும், போர்க் களத்தில் பிள்ளைகளை இழந்துள்ள தாய்மார்களும் தம்பதிகளை வளைத்துக்கொண்டு தாக்க முற்பட்டனர்.

77 வயதுடைய டாக்டர் ரீயும், அவருடைய மனைவியும் இறந்த சிப்பாய்களுக்கு அனுதாபம் தெரிவித்துவிட்டுத் திரும்பும்பொழுது, ஆவேசம் அடைந்த பெண்களுக் கிடையில் சிக்குண்டனர்.

தம்பதிகளைப் பிடித்துக் கொண்டு குலுக்குக் குலுக்கெனக் குலுக்கியும், நெருக்கித் தள்ளியும், அவர்களை 'கார்' ஏறவிடாமல் செய்தனர் அப்பெண்கள். முடிவாக தேசிய போலீஸ் படையினரும், மெய்க்காப்பாளர்களும் ரீ தம்பதிகளுக்கு வழி ஒதுக்கி வசதி செய்தனர்.

தம்பதிகள் காரில் ஏறிக் கொண்டதும், வாகனம் நகரவிடாமல் பெண்கள் முயற்சி எடுத்துக் கொண்டனர். உடன் சென்ற உத்தியோகஸ்தர்களுக்கும் இதே கதி ஏற்பட்டது.

முருகன்குடி தி.மு.கழகத் திறப்பு விழா

11—10—53-ல், முருகன்குடியில் தி. மு. கழகத் திறப்புவிழா தோழர் எ கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் பாலகுருசாமி, தோழியர் பூங்கோதை, பொதுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, ஆகியோர்,கழகக் கொள்கைகளை விளக்கியும், ஆச்சாரியாரின் ஆட்சியின் அவல நிலையைக் குறிப்பிட்டும் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

அந்தக்குடி கலவர வழக்கு நிதிக்கென மாலை ஏலம் போட்டதில் கிடைத்த ரூ. 6—8—0-ம், உண்டியல் மூலம் வசூலான ரூ. 19—8—0-ம், ஆக 26—0—0 ரூபாயை தோழர் ஏ. கோவிந்தசாமி வசம் ஒப்புவிக்கப்பட்டது.

கழகச் செயலாளராகப் பணியாற்ற,பெருங்கலக்குமரர் எ. கந்தசாமி அவர்கள் இசைந்துள்ளார்.

தாத்தையங்கார்பேட்டையில் பொதுக்கூட்டம்

6—10—53-ல், தி. மு கழகப் பொதுக்கூட்டம், சந்தைத் திடலில், தோழர் இ. பரசுராமன் தலைமையில் நடைபெற்றது.'திராவிடம் ஏன் பிரியவேண்டும்?' என்பதுபற்றி, தோழர்கள் நாராயணசாமி, முத்துக்கருப்பன் பேசியபின், தோழியர் பூங்கோதை அவர்கள், திராவிடம் பிரிய வேண்டிய காரணங்களை விளக்கி, நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். கூட்டத்தில் அந்தக்குடி வழக்கு நிதிக்காக உண்டியல் மூலம் வசூலான மூன்று ரூபாயை தோழியர் பூங்கோதை அவர்களிடம் தரப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

காஞ்சிபுரம்

18—10—53 ஞாயிறு மாலை

தலைவர்: ஈ. எத்திராசு

பேசுவோர்:

தோழியர் அருண்மொழி

,, பூங்கோதை

இடம்: கீழண்டை இராச வீதி

★

பட்டாபிராம்

19—10—53 திங்கள் மாலை

தலைவர்: எ. கெங்காதரன்

பேச்சாளர்கள்:

முகவை பாண்டியன்

வி. எஸ். கோவிந்தராசன்

சோ. இறைமுடிமணி

அலமேலு அப்பாதுரை

★

திருவிச நல்லூர்

19—10—53 திங்கள் மாலை

தலைவர்: எஸ் சாமிநாதன்

பேச்சாளர்கள்:

கே. ஆர். சம்பந்தம்,

என். கிட்டப்பா

ஜி. நாராயணசாமி

டி. ஏ. இராமசாமி

மா. செங்குட்டுவேன்

★

குளித்தலை:

19—10—53 திங்கள் மாலை

பேச்சாளர்கள்:

ஏ. பி. தர்மலிங்கம்

எம். எஸ். மணி

★

சமய நல்லூர்:

19—10—53 திங்கள் மாலை

தலைவர்: ஏ. கே. சிவசாமி

பேச்சாளர்கள்:

சி. பி. சிற்றரசு

எம். ஆர். கணேசன்

★★★★★★★★★★★

திருவொற்றியூர் தி. மு. கழகத் தோழர்கட்கு

சென்னை, அக். 16—

திருவொற்றியூர் தி. மு. கழக (கிளை) நிர்வாக உறுப்பினர்களின் தேர்தல் கூட்டம், 18—10—53 ஞாயிறு காலை 9-மணிக்கு, 430, திருவொற்றியூர் ஐரோட், கழகக் கட்டிடத்தில் நடக்க இருப்பதால், இதையே அழைப்பாகக் கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அமைப்பாளர்களான தோழர்கள் எ. வி. ஆறுமுகம்; ஆர். நமசிவாயம் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர்.

சென்னை 6-வது வட்ட தி.மு. கழக தோழர்கட்கு

18—10—53 ஞாயிறு காலை 9 மணிக்கு, கழக இல்லத்தில், சொற்பயிற்சி அமைப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் மதிவாணன் துவக்க விழா வாற்றுவார். உறுப்பினர் அனைவரும் கலந்துகொள்ளும்படி அமைப்பாளர் மு. ஏழுமலை அறிவிக்கிறார்.

மறைமலை அடிகள் நினைவு விழா

பிரம்பை மறைமலை அடிகள் நூல் நிலையத்தின் சார்பாக 18-10-53 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு மறைமலை அடிகள் மூன்றும் ஆண்டு நினைவு விழா நடைபெறும். விழாவிற்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமை வகிப்பார். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, புலவர் மா. நன்னன் ஆகியோர் பேசுவர்.

தி. மு. கழக செயற் குழு தேர்தல்கள்

சேலூர்

30—9—53-ல், கழக நிலையத்தில், செயலாளர் வி. இ செயராமன் தலைமையில் பொது உறுப்பினர்கள் கூட்டம் கூடியது. அதுபோது, தோழர்கள்: வி. இ. செயராமன் செயலாளராகவும், டி. டி. வேதபுரி துணைச் செயலாளராகவும், எம். பி. சுப்ரமணியம் பொருளாளராகவும், என் ஏ. கைலிசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக எம். பி. கோவிந்தராசு, கே. பி. சின்னுப்பா, வி. ஆர். கோபால், பி. ஆர். செயராமன், எம் ஆர். சாமிநாதன், என். மாசிலாமணி, ஆர். புருடோத்தமன், என். சானகிராமன், என் ஜி. கோபால், எம். புட்பநாதன், டி. டி. கண்ணன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பூர்

11—10—53-ல், தொழிலாளர் பருத்தநிலைப் படிப்பகத்தில், தோழர் எல என் நடராசன் தலைமையில் 13, 14-வது வட்டார தி மு. கழகத் தேர்தல் நடைபெற்றது. அதுபோது, செயலாளராக எம். என். அண்ணாமலையும், துணைச் செயலாளராக கே. பழனிசாமியும், பொருளாளராக என். எல. மணியும். நகரக்கிளை பிரதிநிதிகளாக கே. தங்கமுத்து, கே. என். மணியமும், செயற்குழு உறுப்பினர்களாக கே. அப்புசாமி, என். தனக்கோடி, கே. ரங்கசாமி, பி. நடராசன், எம். முனுசாமி, என். ஆறுமுகம், எச். சாயபுகானும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேட்டுநீரோத்தான்

7—10—53-ல், தோழர் மு. செல்லையா அவர்கள் தலைமையில் நடந்த தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில் பொ. கருப்பையா செயலாளராகவும், செ. சாமி துணைச் செயலாளராகவும், தி. ச. வம்பன் பொருளாளராகவும், வி. கிருட்டினன் விளம்பர உறுப்பினராகவும், க. நக்கீரன், நாராயணசாமி, க. மா. க. பிச்சை, அ வீரபத்திரன், மு. செல்லையா, தெ. வே. சிற்றரசன், தி. வே. ராமசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

7-வது வட்ட கண்டனக் கூட்ட வழக்கு

சென்னை, அக். 16—

சென்னை 37-வது வட்ட தி. மு. க கிளைக் கழகத்தின் சார்பாக 21—9—53ல் நடைபெற்ற கண்டனக் கூட்ட வழக்கு, 14—10—53 புதன் காலை 9 மணிக்கு சைதாப்பேட்டை கோர்ட்டில் மூன்று கௌரவ நீதிபதிகள் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதி: நீங்கள் குற்றவாளிகளா?

தோழர்கள்: இல்லை.

நீதிபதிகளில் இருவர் ஒருவருக்கொருவர் விவாதித்து முடிவில்; 'நீங்கள் போகலாம் என்றும், மறுபடியும் உங்களுக்கு சம்மன் வந்தால் கோர்ட்டுக்குவரவேண்டும்,' என்றும் சொல்லிவிட்டார்கள்.

கோர்ட்டில் ஆஜரான தோழர்கள்:

வெற்றிவீரன் (தலைவர்), பொ. கா. சண்முகம், ம. இ. ராமலிங்கம், கண்ணன், கிருஷ்ணமூர்த்தி, எம். தாஸ், பி. நாகராசன், எ. செல்வம்.

உலக நெருக்கடியை குறைப்பதற்காக, ரஷ்யாவை மற்ற வல்லரசுகள் தாக்காது என்ற உறுதிமொழி கோருக்கும் அடிப்படையில் நான்கு வல்லரசுத் தலைவர்கள் கூட்டம் நடத்த முடியுமா வென லண்டனில் உள்ள மூன்று மேற்கு வல்லரசுகளின் மாஸ்கோ தூதுவருடன் கலந்தாலோசிக்கப்படுகிறது.

டிரீஸ்டி விவகாரத்தில் சோவியத் தலையீட்டை யூகோ விரும்பவில்லை!

ரஷ்யாவின் விருப்பத்திற்கு யூகோ கண்டனம்

பெல்கிரேட், அக். 16—

யூகோஸ்லாவ் சர்க்காரின் உதவித் தலைவரும், டிட்டோவின் சிறந்த உதவியாளர்களில் ஒருவருமான மோஷி பிரேட் என்பவர், டிரீஸ்டி விவகாரத்தில் சோவியத் ரஷ்யா தலையிடுவதை விரும்பாததோடு, எதிர்த்தும் எழுதியுள்ளார்.

சோவியத் கருத்து ‘டிரீஸ்டி மக்களுக்கு, நன்மை தேவை தாகவும் இல்லை; யூகோவின் நலன்களுக்கு ஒத்ததாகவும், இல்லை’ என்று ‘பொலிடிகா’ இதழில், அவர் எழுதியுள்ளார்.

இதுதான் யூகோ சார்பில், சோவியத் போக்கை எதிர்த்துக் கூறப்பட்டுள்ள முதல் அறிவிப்பாகும்.

“சோவியத் சர்க்கார் டிரீஸ்டி பிரச்னையில் குறுக்கிடுவதை என்றும் விட்டுவிட்டது கிடையாது. யூகோஸ்லாவியா, கோமின்பார்மை விட்டு வெளியேறிய காலத்தில், 1948-ல், டிரீஸ்டி தகராறு கிளம்பியபொழுது, சோவியத் யூனியன் நடந்து கொண்டதைக் காட்டிலும், இப்பொழுது ஒன்றும் மாறுதலாக யூகோ நலன்களைப் பொருட்டாக மதித்து நடந்து கொள்ள முன்வரவில்லை’ என்று அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டிரீஸ்டி பிரச்னை விஷயமாக ஆங்கிலோ அமெரிக்க தீர்ப்பு வெளியானவுடன், சென்ற வாரத்தில் இருந்தது போன்ற கொந்தளிப்பு இப்பொழுது குறைந்து இருக்கிறது. இத்தாலியிலும் யூகோவிலும் இந்த மாற்றம் விளக்கமாகத் தெரிகிறது ‘பொறுத்துப் பார்ப்போம்’ என்கிற போக்கு நிலவி இருக்கிறது.

ஆனால், டிரீஸ்டி நகர கவுன்சில், டிரீஸ்டி ‘ஏ’ பகுதியை இத்தாலிக்கு ஒப்படைத்துவிடவேண்டும் என்ற ஆங்கிலோ அமெரிக்க முடிவை ஆதரித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது.

திருச்சி தோழர்கள் வழக்கு

திருச்சி, அக். 15—

திருச்சி நகர தி. மு கழக துணைச் செயலாளர் சு. அருணகிரி, மற்றும் மலைக்கோட்டை தி. மு கழகக் கிளைத் தோழர்கள் மீது போலீசாரால் தொடரப் பட்ட வழக்கு, ஆறு தடவைகள் விசாரணைக்குப் பின்னும், மீண்டும், வழக்கு, 21-10-53-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொய் வழக்கு தோற்றது; மெய்யரசு விடுதலை

சென்னை, அக். 15—

42-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் மெய்யரசு, நேரு பண்டிதருக்குக் கருப்புக்கொடி காட்டி, எஸ். எ. பி. சப் இன்ஸ்பெக்டரால்கையுத்தாக்கப்பட்டு, அன்றே மவுண்ட் ரோடு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

அன்று முழுவதும் மவுண்ட் ரோடு போலீஸ் ஸ்டேஷனில் லாக்காப்பில் வைக்கப்பட்டு, மறுநாள் காலை எழும்பூர் கோர்ட்டில் நிறுத்தப்பட்டார்.

தோழர் மெய்யரசு, கலவரம் செய்ததாகக் கூறப்படும் 75-வது செக்ஷனை மறுத்தார். வழக்கு 10-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் சனியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதியின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், தான் கலவரம் செய்யவில்லை யென்றும், தன்னைக் கைது செய்தது இந்தப் போலீஸ் அல்லவென்றும் மெய்யரசு வாதாடினார்.

உடனே நீதிபதி, இது போன்ற ஆதாரமில்லா வழக்குகளைக் கொண்டு வருவது கண்டிக்கத் தக்கதென போலீசாருக்கு புத்திமதி கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்.

கெய்ரோ, அக். 15—

எகிப்தில், பிரிட்டனுக்கு வேவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முகம்மது ஸாப்ரி தூக்கிலிடப்பட்டு விட்டார்.

சர்ச்சிலுக்கு நோபல் இலக்கியப் பரிசு

நேரில் சென்று பெறுவார் என எதிர்பார்த்தல்

ஸ்டாக்ஹோம், அக். 16—

வரலாற்றுத் தொடர்புடையதும், விளக்கத் தொடர்புடையதுமான சுவடிகளை எழுதுவதில் மிகத் திறமை வாய்ந்தவர் என்பதற்காகவும், மனித சமுதாயத்தின் உயர்ந்த பண்புகளைப் பாதுகாப்பதில் சிறந்த நாவன்மை பெற்றிருப்பவர் என்பதற்காகவும், இவ்வாண்டைய நோபல் இலக்கியப் பரிசை பிரிட்டிஷ் பிரதமர் சர் வின்சண்ட் சர்ச்சில் துரைக்குக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவருக்கே, இவ்வருஷத்தைய சமாதானப் பரிசையும் கொடுப்பது என்று வதந்தி ஏற்கனவே இருந்து வந்தது. இலக்கியத்திற்காகவும், சமாதானத்திற்காகவும் ஆன இரு நோபில் பரிசுகளை சர்ச்சில் பெறப் போகிறார் என்பதே வதந்தியின் விவரம்.

உலகத்திலேயே தலை சிறந்த இலக்கிய ஆசிரியராக சர்ச்சில் இருக்கிறார் என்பதைக் கேட்ட அளவில், அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவர் ஸ்வீடனுக்கு நேராக டிசம்பர் 10-ந் தேதி சென்று, கஸ்டாவ் அடால்ப் அவர்களிடம் பரிசைப் பெறுவார்.

‘இரண்டாவது உலகப் பெரும் போர்’ என்று அவர் எழுதியுள்ள ஆங்கில வரலாற்று நூலுக்காகவே, இந்த நோபல் பரிசு அவருக்கு அளிக்கப் பெறுகிறது.

10 அவுன்ஸ் நிறையுள்ள தங்கப்பதக்கமும், ரூபாய் 1,64,787ம் அந்த நோபல் பரிசுக்கு உரியதாகும்.

இதுவரை சர்ச்சில் முப்பது புத்தகங்கள் வரை எழுதியுள்ளார். இதில், அவருடைய போர்க்கால பேச்சுகளும் அடங்கியுள்ளன.

“பகுத்தறிவு”

ஆசிரியர்: ப. கண்ணன்

★

இம்மாத இதழ் வெளிவந்து விட்டது, அறிவுக் களஞ்சியமாக!

தனிப்படி 0—4—0.

எங்கும் கிடைக்கும்

“பகுத்தறிவு” அலுவலகம். சலகண்டபுரம், சேலம்மாவட்டம்

கொரியப் பகுதியில் பாதுகாப்பு அரண்கள் எழுகின்றன!

— (:) —

மீண்டும் யுத்தம் மூளும் என்ற அச்சத்தின் விளைவு!

ஏட்டிக்குப் போட்டியாக இருதரப்பினரின் ‘எழுச்சி!’

நியூயார்க், அக். 16—

கொரியாவில் மீண்டும் சண்டை ஏற்படலாம் என்பதை எதிர்பார்த்து அமெரிக்கத் துருப்புகள் புது பாதுகாப்பு அரணை அமைத்து வருகிறது.

கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாதென்றும், கம்யூனிஸ்டுகள் மீண்டும் தாக்கமாட்டார்கள் என்று உறுதி ஏற்பட்ட பின்னர்தான், துருப்புக்களைக் குறைப்பது குறித்து யோசிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

யுத்த நிறுத்தத்திற்குப் பின், கம்யூனிஸ்டுகள், மஞ்சூரியாவிலிருந்து வடகொரிய விமான நிலையங்களுக்கு, சண்டை விமானங்களை இழுப்பு வண்டியில் கொண்டு வந்து சேர்த்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதென்றும், நடுநிலைமைக் கமிஷன் இது விஷயமாக, விசாரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

யுத்த நிறுத்தத்திற்குப் பின் சுமார் 800 ஜெட் விமானங்கள் வடகொரியாவிற்கு கம்யூனிஸ்டுகளால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருப்பதாக ஐ. ந. தளபதி அமெரிக்க அதிகாரிகளுக்குக் குறிப்பு அனுப்பியுள்ளார்.

தூத்துக்குடி ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம்

நிறைவேறிய தீர்மானங்களின் விவரம்

தூத்துக்குடி, அக் 17—

11-10-53 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணிக்கு தூத்துக்குடி மேலூர் (வட்டத் தெப்பகுளம்) உச்சிமாகாளி மைதானத்தில், ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம் சங்க காரியதரிசி தோழர் வெ. அருணசலம் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் ஆ. வீரபுத்திரன், கே. தானமுத்து ஆகியோர் கம்யூனிஸ்டுகளின் போட்டி சங்கப் பித்தலாட்டங்களைப் பற்றி விளக்கவுரை யாற்றினர். ஸ்பின்னிங் மில் தொழிலாளியான கோபால் கீழ்கண்ட தீர்மானங்களை வாசித்தார்.

(1) தென்னாட்டின் தொழிலாளர் தலைவரும், தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனாரின் மரணம் குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(2) ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம் ரிஜிஸ்தர் (ரிர். 1629) செய்யப்பட்டு, மில் மானேஜ்மெண்ட் அங்கீகரித்து செயல்பட்டுக்கொண்டிருக்கும் தொழிற்சங்கம் இருக்க, கம்யூனிஸ்டுகள், தங்கள் ஆதிக்கம், தொழிலாளர்கள் மத்தியில் ஏற்படவேண்டும் என்ற நோக்கத்தோடு கட்சி ஆதிக்கத்தை ஏற்படுத்த போட்டி சங்கம் ஏற்படுத்தி தொழிலாளி வர்க்கத்தை பிளவுபடுத்துவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(3) 4-10-53 அன்று தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் மில் நிர்வாகத்திற்கும் போர்டு கூட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் முடிவை, போட்டி தொழிற்சங்க நிர்வாகிகள் லேபர் அதிகாரி மூலம் தெரிந்துகொண்டு, தாங்கள் கொடுத்திருந்த உள்ளிருப்பு வேலை நிறுத்த நோட்டீசை வாபஸ் பெற்றுக்கொண்டு, எல்லாம் எங்கள் சங்கத்தின் சாதனை என்று கூறி விளம்பரப்படுத்தும் சிறுமதி செயலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, போட்டி சங்கத்தைக் கலைத்துவிட்டு, தொழிலாளி வர்க்க நன்மைக்காக, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கோஷத்தை கம்யூனிஸ்டுகள் நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கேட்டுக் கொள்கிறது.

(4) சங்கத் தலைவர் தோழர் கே. வி. கே. சாமியை, ஜூலை 14-ம் தேதி நள்ளிரவில் கைது செய்துவிட்டு, இப்பொழுது அவர்மீது சதிக்குற்றம் சாட்டி, நோய்வாய் பட்டிருந்த போதிலும் வெளியில்விடாமலிருப்பதை இக்கூட்டம் வன்மையுடன் கண்டிப்பதுடன், அவரை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

(5) ஒரே வேலை செய்யும் தொழிலாளர்களில் ஒருவருக்கு குறைந்த சம்பளமும், ஒருவருக்கு அதிக சம்பளமும் கொடுத்து வரும் பாகுபாடு ஒழிக்கப்படவேண்டுமென்று, மில் நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

(6) ஜூலை 15-ந் தேதி இரயில் நிறுத்தப் போராட்டத்தில் உயிர் நீத்த எங்கள் சகத் தொழிலாளி தோழர் உச்சிமாகாளியின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

(7) ஜூலை 15-ந் தேதி தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் அரசாங்கம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பங்களுக்கும் சர்க்கார் நியாயமான நஷ்டஈடு கொடுக்கும்படி சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

(8) தூத்துக்குடியின் மக்கள் தொகை லட்சத்துக்குமேல், இருப்பதால், புதிய தண்ணீர் திட்டத்தை சிபார்சு செய்துள்ள சர்க்கார், இவ்வூரிலுள்ள மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளக் கமிஷன் தீர்ப்புப்படி வீட்டு வாடகை, அலவன்ஸ் வழங்கும்படி வற்புறுத்துகின்றது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியருக்குக் கடிதம்

ஆசிரியர், ‘நம் நாடு’,

ஜூலை 15 ரயில் நிறுத்தக் கிளர்ச்சி சம்பந்தமாக தோழர் கே. வி. கே. சாமி கைது செய்யப்பட்டார். இதைப் பயன்படுத்தி, தூத்துக்குடி கம்யூனிஸ்டு கட்சி—தன் ஆதிக்கத்தை இழக்க கம்யூனிஸ்டு கட்சி, தொழிற் சங்கத்தில் பிளவையும், போட்டியையும் உண்டுபண்ணி விட்டது. தூத்துக்குடி ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம், சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. அதன் தலைவர் தோழர் கே. வி. கே. சாமி அவர்களேயாகும்.

தோழர் கே. வி. கே. சாமி, சிறை சென்றவுடன், கம்யூனிஸ்டுகள், போட்டி சங்கம் வைத்து, சீர்குலைவு வேலை செய்கிறார்கள். ஆனால், தொழிலாளர்கள் இவர்கள் வலையில் சிக்க மறுத்துவிட்டார்கள். எனவே, பத்திரிகையின் மூலம் தங்கள் பொய்ப் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டார்கள். கம்யூனிஸ்டு நண்பர் ஒருவரே, “தினத்தந்தி” யின் நிருபராக இருப்பதால், தவறான செய்திகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பிரசுரிக்க அனுப்புகிறார். அதைத் “தினத்தந்தி” யார் அப்படியே போட்டு விடுகிறார்.

7—10—53-ல், ஸ்பின்னிங் மில்லை பற்றி வெளியான செய்தியை, திரித்தும், தாங்களே சாதித்ததாகவும் கூறி, தொழிலாளர்களின் கூலியைக் குறைவாக ஒப்பந்தம் பேசியதாகவும், பத்திரிகைச் செய்தியின் படி தெரிகிறது; இதனால், முதலாளிகளின் தூண்டுதலின் பேரில் போட்டிச் சங்கம் வைத்ததாகவே தெரிகிறது.

தோழர் கே. வி. கே. சாமியிடம், மில் மானேஜ்மெண்ட், அடியிற் கண்டபடி கொடுக்க சம்மதித்தது:—

1952-53ம் ஆண்டில், வேலை செய்த தொழிலாளர்களுக்கு, 3 மாத அடிப்படைச் சம்பளம் ரூ. 78 வருடப் போனஸ் கொடுக்கப்படும்;

இரவு வேலை, பகல் வேலை—வாரா வாரம் மாறும்;

அடிப்படைச் சம்பளம் ரூ. 26—0—0-ம், புள்ளி ஒன்றுக்கு 0—2—6 அணாவும், 1953 டிசம்பரிலிருந்து கொடுக்கப்படும்;

ஒரு வருடத்திற்கு 15 நாள் லீவு, அந்த வருடத்தில், எடுக்க வேண்டுமானாலும், எடுத்துக் கொள்ளலாம்;

1—7—53-க்கு மேல், எடுக்கப்படுகிற தொழிலாளர்களைத் தவிர, முன்பு வேலை செய்கிற வெளி வேலைத் தொழிலாளர்கள் உட்பட அனைவரையும் நிரந்தரமாக்கப்படும்;

பழி வாங்கப்பட்ட குழைமாணிக்கத்திற்கு உடன் வேலை கொடுக்கப்படும்;

ராட்டுக்கு, வரவு ஒன்றுக்கு, 0—1—6 கொடுக்கப்படும்;

மற்றும், பேக்டரி சட்டப்படியான வசதிகளும் கொடுப்பதாக தோழர் கே. வி. கே. சாமியிடம் மானேஜ்மெண்ட் ஒப்புக்கொண்டது.

ஆனால், இதற்கு மாறாகக் கூலியைக் குறைத்து ஒப்பந்தம் செய்ததாக 7-10-53-ந் தேதிய ‘தினத் தந்தி’யில் வந்த செய்தி தவறானது. அவர்களுக்கும் மில் தொழிலாளர்களுக்கும்யாதொரு சம்பந்தமுமில்லை எனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆறுமுகம், பி. ஏ.,
செயலாளர்,
ஸ்பின்னிங் மில், தொழிலாளர் சங்கம், ரிஜி. 1602.

திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

சென்னை, அக். 15—

மேற்படி படிப்பகத்தில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில், தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும், டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றுமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், நேருவின் பேச்சை வன்மையாகக் கண்டித்தும், கழக சார்பில் கருப்புக் கொடி காட்டிய தோழர்களைக் காங்கிரஸ் கூலிகள் தாக்கியதைக் கண்டித்தும், கருப்புக்கொடி காட்டிய தோழர்களைப் பாராட்டியும், தூத்துக்குடி வழக்கு நிதிக்கு நிதி திரட்டித் தர முடிவு செய்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.